**த. நா.ச.பே. எண் : 031** **நாள் : 01.09.2016**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110–**ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 1.9.2016

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களை இணைப்பதிலும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. போக்குவரத்து சேவையை, பொதுமக்களுக்கு குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு அளித்து வரும் அரசு போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் நாள்தோறும் 1.79 கோடி பயணிகள் 20,839 அரசு பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். டீசல் விலை உயர்வால் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தும் நிலையை தவிர்க்கும் வகையில், போக்குவரத்துக் கழகங்களுக்கு எனது தலைமையிலான அரசு 2012-ஆம் ஆண்டு முதல் டீசல் மானியம் வழங்கி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 1,556 கோடியே 72 லட்சம் ரூபாய் டீசல் மானியமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறையின் சார்பில் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. சென்னை மாநகரில் தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் 200 சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களை அருகில் உள்ள போக்குவரத்து முனையங்களுடன் இந்த சிற்றுந்துகள் இணைக்கின்றன. சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இந்த ஆண்டு இயக்கப்படும்.

2. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியில் இருக்கும் போது இறந்து போன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பதிவு மூப்பின் அடிப்படையில் ஒரு போக்குவரத்துக் கழகத்தில் 200 பணியிடங்கள் என்ற வீதத்தில் 8 போக்குவரத்துக் கழகங்களில் 1,600 பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்படும்.

*****

**வெளியீடு: – இயக்குநர்,** **செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**